இந்திய உச்ச நீதிமன்றம்

2020-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் தனன்ஜெயா ஒய் சந்திரசூத்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் அஜய் ரஸ்தோகி

உரிமையியல் மேல்முறையீடு எண் 2230/2020

ஆந்திரப் பிரதேச மாநில அரசு ...மேல்முறையீட்டாளர்

/எதிர்/

தி/ள். லிண்டிண்டியா லிமிடெட்.

(முன்பு பி.ஓ.சி. இந்தியா லிமிடெட்) ... எதிர்மேல்முறையீட்டாளர்

ஆந்திரப் பிரதேச மதிப்பு கூட்டப்பட்ட வரிச் சட்டம், 2005 - பதிவு 88, அட்டவணை IV; அட்டவணை V – 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எதிர்மனுதாரர் - நிறுவனம் தொழில்துறை வாயுக்களின் உற்பத்தி, வர்த்தகம் மற்றும் மருத்துவ ஆக்ஸிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது - பதிவு 88, அட்டவணை IV- இன் படி மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு

IP ஆகியவற்றிக்கு வரி விதிக்கப்படுமா அல்லது 'வகைப்படுத்தப்படாத பொருட்கள்' அட்டவணை V மற்றும் அவற்றின் மீது விதிக்கப்படும் வரி விகிதம் விதிக்கப்படுமா –

முடிவு: அட்டவணை IV பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு 4% / 5% என்ற சீரான வரி விகிதத்தை பரிந்துரைக்கிறது - பதிவு 88, 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b) கூறு (i), (ii) & (iii)-இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி மருந்துகளை உள்ளடக்கியது – 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b) கூறு (i), (ii) & (iii)-இன் வரம்பிற்குள் வரும் மருந்துகள் அட்டவணை IV-ன் வரம்பிற்குள் வருகிறது - அட்டவணை I, III, IV & VI-இன் வரம்பிற்குள் வராத அனைத்து பொருட்களுக்கும் 14.5% வரி விதிக்கப்படும் என்று அட்டவணை V வரையறுக்கிறது- 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 16 உ/இ. இரண்டாவது அட்டவணை மற்றும் இந்திய மருந்தியல் (இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஒரு தன்னாட்சி நிறுவனம், "இந்திய பார்மகோபோயா" என்ற தலைப்பில் அதன் வெளியீடு மூலம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளின் அடையாளம், தூய்மை மற்றும் வலிமைக்கான தரநிலைகளை பரிந்துரைக்கிறது) உள்ள மருத்துவ ஆக்சிஜனின் விவரக்குறிப்பு 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி மருத்துவ ஆக்ஸிஜன் IP ஒரு மருந்து என்ற எதிர்மேல்முறையீட்டாளரின் வாதத்தை ஆதரிக்கிறது - மேலும், 2013-ஆம் ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டு உத்தரவில் 2011-ஆம் ஆண்டின் அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் உள்ளது - ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவற்றை மயக்க மருந்தாக அதில் சேர்ப்பது 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உடல் உபாதை அல்லது நோயைக் கண்டறிந்து

சிகிச்சையளிப்பதில் அதன் பயன்பாட்டிற்கு ஆதரவை வழங்குகிறது – 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இன் வரம்பிற்குள் வரும் மருந்துகளான ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை மனிதர்களுக்கு ஏற்படும் நோய் அல்லது உடல் உபாதைகளை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படுகிறது மற்றும் அவை 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் பதிவு 88-இல் உள்ளடக்கப்பட்டுள்ளன - மருந்துகள் மற்றும் அழகுசாதன சட்டம், 1940 - பிரிவு 3(b)(i)-(iv); பிரிவு 16 – சட்டங்களின் விளக்கம் – அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 – பிரிவு 3 – மருந்து (விலை கட்டுப்பாடு) ஆணை 2013.

மேல்முறையீடுகளை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது,

முடிவு: 1.1 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் அட்டவணை IV பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு 4% / 5% என்ற சீரான வரி விகிதத்தை பரிந்துரைக்கிறது. பதிவு 88, 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)-இன் கூறுகள் (i), (ii) மற்றும் (iii) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள காப்புரிமை அல்லது தனியுரிமை பெற்ற மருந்துகளை உள்ளடக்கியது. பிரிவு 3(b)-இன் கூறுகள் (i), (ii) மற்றும் (iii) ஆகியவற்றின் வரம்பிற்குள் வரும் எந்த மருந்தும் அட்டவணை IV-இன் வரம்பிற்குள் வரும். குறிப்பிடப்பட்ட மூன்று விலக்குகளைத் தவிர, ஹைப்போடெர்மிக் சிரிஞ்ச்கள், ஹைப்போடெர்மிக் ஊசிகள், கேட்கட்ஸ், தையல்கள், அறுவை சிகிச்சை பருத்தி, டிரஸ்ஸிங், பிளாஸ்டர்கள், கேதர்ட்டர்கள், கேனுலா, பேண்டேஜ்கள் மற்றும் 'ஒத்த பொருட்கள்' சேர்க்கப்பட்டு, பதிவு 88 வரையறுக்கிறது. அட்டவணை I, III, IV மற்றும் VI ஆகியவற்றின் வரம்பிற்குள் வராத அனைத்து பொருட்களுக்கும் 14.5% வரி விதிக்கப்படும் என்று அட்டவணை V

வரையறுக்கிறது. பிரிவு 3(b)-இன் கூறு (i) ஒரு மருந்தை, மனிதர்கள் அல்லது விலங்குகளின் உள் அல்லது வெளிப்புற பயன்பாட்டிற்கான மருந்துகளாகவும், மற்றும் மனிதர்கள் மற்றும் விலங்குகளை "எந்தவொரு நோய் அல்லது உடல் உபாதையை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட தயாரிப்புகள் உட்பட அனைத்து பொருட்களாகவும் வரையறுக்கிறது. பிரிவு 3(b)-இன் கூறு (iv)-ஆனது மனிதர்கள் அல்லது விலங்குகளில் நோய் அல்லது உடல் உபாதையை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க உபயோகபடுத்தப்படும் உள் அல்லது வெளிப்புறப் பயன்பாட்டிற்காக 'உத்தேசிக்கப்பட்ட' அனைத்து சாதனங்களையும் உள்ளடக்கியது. [பத்திகள் 10 - 12] [846-B, E-G; 847-D]

சிமன்லால் ஜக்கிவன்தாஸ் ஷெத் /எதிர்/ மகாராஷ்டிரா மாநில அரசு ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 665 : [1963] சப்லி. எஸ்.சி.ஆர். 344; ஈஸ்வர் சிங் பிந்த்ரா /எதிர்/ உத்தர பிரதேச மாநில அரசு [1969] 1 எஸ்.சி.ஆர். 219 – குறிப்பிடப்படுகிறது.

1.2 "மருந்து" என்ற சொல் 1940-ஆம் ஆண்டு சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. மருந்து என்ற வார்த்தையின் சாதாரண அல்லது பிரபலமான அர்த்தமானது, பொதுவாக அதன் குணப்படுத்தும் பண்புகளாலும் மற்றும் குறிப்பாக, எந்தவொரு நோய் அல்லது உடல் உபாதையை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படும் பண்புகளாலும் வகைப்படுத்தப்படுகிறது. [பத்திகள் 16, 18] [849-G; 852-B]

இமாச்சல பிரதேச மாநில அரசு /எதிர்/ பவன் குமார் (2005) 4 எஸ்.சி.சி. 550; கோவா மாநில அரசு /எதிர்/ லுகோபிளாஸ்ட் (இந்தியா) லிமிடெட். (1997) 4 எஸ்.சி.சி. 82 : [1997] 2 எஸ்.சி.ஆர். 516 – சார்வுறப்பட்டது.

இமாச்சல பிரதேச மாநில அரசு /எதிர்/ பவன் குமார் 2005 கிரிமி.லா.ஜெ. (எஸ்.சி.) 2008; ஹரியானா மாநில அரசு /எதிர்/ சுரேஷ் (2007) 15 எஸ்.சி.சி. 186 : [2007] 7 எஸ்.சி.ஆர். 961; ராஜஸ்தான் மாநில அரசு /எதிர்/ பாபு ராம் (2007) 6 எஸ்.சி.சி. 55 : [2007] 7 எஸ்.சி.ஆர். 939; சுங்க ஆணையர் (இறக்குமதி), மும்பை /எதிர்/ திலீப் குமார் மற்றும் நிறுவனம் (2018) 9 எஸ்.சி.சி. 1: [2018] 7 எஸ்.சி.ஆர். 1191 - குறிப்பிடப்பட்டுள்ளது.

பிளாக் சட்ட அகராதி; காலின்ஸ் அகராதி; கேம்பிரிட்ஜ் அகராதி - குறிப்பிடப்படுகிறது.

1.3 இந்திய மருந்தியல் ஆணையம் (Indian Pharmacopoeia Commission) இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இ.ம.ஆ. (IPC), 'இந்தியன் பார்மகோபோயா' என்ற தலைப்பில் அதன் வெளியீட்டின் மூலம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளின் அடையாளம், தூய்மை மற்றும் வலிமைக்கான தரங்களை பரிந்துரைக்கிறது. மருத்துவ ஆக்சிஜன் (99.9% தூய்மையில்) 'ஆக்சிஜன் ஐபி' எனப்படும் மருந்தாக சேர்க்கப்பட்டுள்ளது. பிரிவு 16 உ/இ. இரண்டாவது அட்டவணை மற்றும் இந்திய மருந்தியலில் உள்ள மருத்துவ ஆக்சிஜனின் விவரக்குறிப்பு 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி மருத்துவ

ஆக்ஸிஜன் IP ஒரு மருந்து என்ற எதிர்மேல்முறையீட்டாளரின் வாதத்தை ஆதரிக்கிறது. மேலும், அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955 பிரிவு 3)-இல் வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய அரசு மருந்து (விலை கட்டுப்பாடு) ஆணை 2013-ஐ வெளியிட்டது. பத்தி 2(டி) 'தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியல்' என்பது தேசியப் அத்தியாவசிய மருந்துகள் பட்டியல் 2011 என்பதைக் குறிக்கிறது, இது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு திருத்தப்பட்டு வெளியிடப்படுகிறது. 2011 ஆம் ஆண்டின் அத்தியாவசிய மருந்துகளின் தேசியப் பட்டியல் வரிசையில் முதல் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறது. அதில் பயன்படுத்தப்படும் மற்றும் வரையறுக்கப்படாத, ஆனால் 1940-ஆம் ஆண்டு சட்டத்தில் வரையறுக்கப்பட்ட மற்ற அனைத்து சொற்கள் மற்றும் வெளிப்பாடுகள் முறையே 1940-ஆம் ஆண்டு சட்டத்தில் ஒதுக்கப்பட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று பத்தி 2 (2) வரையறுக்கிறது. முதல் அட்டவணையில் அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் 2011 உள்ளது. பிரிவு 1.1 நைட்ரஸ் ஆக்சைடு மற்றும் ஆக்ஸிஜன் ஆகிய இரண்டையும் 'அனஸ்தீசியா' வரம்பிற்குள் மருந்துகளாக உள்ளடக்கியது. ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவற்றை மயக்க மருந்தாக அதில் சேர்ப்பது, 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உடல் உபாதை அல்லது நோயைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதில் அதன் பயன்பாட்டிற்கு ஆதரவை வழங்குகிறது. [பத்திகள் 20-23] [853-F-H; 854-A-B, G-H]

சதர்ன் கேஸ் லிமிடெட் /எதிர்/ கேரளா மாநில அரசு (2005) 3 கே.எல்.டி. 78; இந்தியன் ஆக்சிஜன் லிமிடெட் /எதிர்/ கர்நாடகா மாநில அரசு (1989) எஸ்.சி.சி. ஆன்லைன் கர். 459; தமிழ்நாடு மாநில அரசு /எதிர்/ ராம் ஆக்ஸிஜன் (பிரைவேட்) லிமிடெட். 2010 (35) வி.எஸ்.டி. 478; பாங்கி ஆக்சிஜன் /எதிர்/ உத்தரப்பிரதேச மாநில அரசு (2014) எஸ்.சி.சி. ஆன்லைன் ஆல். 2144 – மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

1.4 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இன் வரம்பிற்குள் வரும் மருந்துகளான ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை மனிதர்களுக்கு ஏற்படும் நோய் அல்லது உடல் உபாதைகளை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படுகிறது. மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3 (b) (i)-இன் வரம்பிற்குள் வருகின்றன, மற்றும் அதன் விளைவாக அவை 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் பதிவு 88-இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் பட்டியல் 88-க்குள் மருத்துவ ஆக்ஸிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை அடங்கும் என்று உயர் நீதிமன்றத்தின் தடைசெய்யப்பட்ட தீர்ப்பு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. [பத்திகள் 31, 32] [859-B-C]

ஐனாக்ஸ் ஏர் புராடக்ட்ஸ் லிமிடெட் /எதிர்/ தி அசிஸ்டண்ட் கமிஷனர் (சி.டி.), ஹைதராபாத் 2014 வி.இல். (VIL) 339 ஆ.பி.; சதர்ன் கேஸ் /எதிர்/ கேரளா மாநில அரசு 2005 (139) எஸ்.டி.சி. 504 (கேர); தமிழ்நாடு மாநில அரசு /எதிர்/ ராம் ஆக்ஸிஜன் [2011] 5 ஜி.எஸ்.டி. 87 (மெட். உ.நீ.ம.); சிமன்லால் /எதிர்/ மகாராஷ்டிரா மாநில அரசு 2004 (137) எஸ்.டி.சி. 68; இந்திய ஆக்சிஜன் /எதிர்/ கர்நாடகா மாநில அரசு 1990 (79) எஸ்.டி.சி. 351;

கேரளா மாநில அரசு /எதிர்/ இந்தியன் ஆக்சிஜன் 2003 (129) எஸ்.டி.சி. 471; ஏ.சி.டி.ஒ., சிறப்பு வட்டம் ஜோத்பூர் /எதிர்/ தி/ள். ஜோத்பூர் வாயுக்கள் (2009) எஸ்.சி.சி. ஆன்லைன் 2459 - குறிப்பிடப்படுகிறது.

நீதியரசர் ஜி பி சிங்யின் சட்டப்பூர்வ விளக்கத்தின் கோட்பாடுகள்; கிரைஸின் சட்ட விதிகள்; கேடி திரிபாதியின் எசென்ஷியல்ஸ் ஆஃப் மெடிக்கல் பார்மகாலஜி, VII-வது பதிப்பு பக்கம் 378 - குறிப்பிடப்படுகிறது.

வி லெவ், ஈ மெக்கே, எம் மேஸ்-யின் 'பாஸ்ட், பிரஸ்ன்ட் மற்றும் பியூட்டசர் ஆப் நைட்ரஸ் ஆக்சைட் (Past, Present and Future of Nitrous Oxide), பிரிட்டிஷ் மெடிக்கல் புல்லட்டின், தொகுதி 125, வெளியீடு 1, மார்ச் 2018, பக்கங்கள் 103–119; உ.சு.அ. (WHO) மாதிரி பரிந்துரைக்கும் தகவல்: மயக்க மருந்தாக பயன்படுத்தப்படும் மருந்துகள் (1989) - குறிப்பிடப்படுகிறது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[1963] சப்ளி. எஸ்.சி.ஆர். 344 ... பத்தி 13

[1969] 1 எஸ்.சி.ஆர். 219 ... பத்தி 14

(2005) 4 எஸ்.சி.சி. 550 ... பத்தி 17

2005 கிரிமி.லா.ஜெ.(எஸ்.சி.) 2008 ... பத்தி 17

[2007] 7 எஸ்.சி.ஆர். 961 ... பத்தி 17

[2007] 7 எஸ்.சி.ஆர். 939 … பத்தி 17

[2018] 7 எஸ்.சி.ஆர். 1191 … பத்தி 17

[1997] 2 எஸ்.சி.ஆர். 516 … பத்தி 17

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 2230/2020

வரி சீராய்வு மனு எண் 53/2015-இல் தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கான ஹைதராபாத் உயர் நீதிமன்றத்தின் 25.01.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இருந்து.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 2233-34, 2231 மற்றும் 2232/2020

முன்னிலையாகும் தரப்பினர்களுக்கான வழக்குரைஞர்கள் - சஞ்சிப் சென், மூத்த வழக்குரைஞர், குண்டூர் பிரபாகர், ஹேமல் கிரித்குமார் ஷெத், டி.விஜய பாஸ்கர் ரெட்டி, திக்விஜய் ஹரிசந்தன், ஜி.என்.ரெட்டி, ஷப்யாஷேச்சி பத்ரா, சஞ்சீவ் குமார், தி/ள்.கைதான் & கோ, அன்னம் டி.என்.ராவ், அன்னம் வெங்கடேஷ், ராகுல் மிஸ்ரா, அனன்யா கண்டேல்வால், அவ்னி ஷர்மா, மற்றும் எம்.சங்கீதா.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை **மாண்புமிகு நீதியரசர் முனைவர் தனன்ஜெயா ஒய் சந்திரசுத்** அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது

2. தற்போதைய மேல்முறையீடுகளில் எழும் சட்டக் கேள்வியின் சுருக்கம் என்னவென்றால், 'மருத்துவ ஆக்ஸிஜன் IP' மற்றும் 'நைட்ரஸ் ஆக்சைடு IP' ஆகியவை

ஆந்திரப் பிரதேச மதிப்பு கூட்டப்பட்ட வரிச் சட்டம் 2005(*1*)-இன் அட்டவணை IV-இன் பதிவு 88-இன் கீழ் அல்லது அட்டவணை V-யின் கீழ் 'வகைப்படுத்தப்படாத பொருட்கள்' கீழ் வரி விதிக்கப்படுமா. இதில் இரண்டு தயாரிப்புகளின் வகைப்பாடு அவற்றின் மீது விதிக்கப்பட வேண்டிய வரி விகிதத்தை தீர்மானிக்கிறது - பதிவு 88-இன் கீழ் 4% / 5%(*2*) அல்லது அட்டவணை V-இன் கீழ் 12.5% / 14%(*3*).

3. இந்த நீதிமன்றத்தின் முன் உள்ள மேல்முறையீடுகளில் உள்ள சங்கதிகள் ஒத்து இருப்பதால், முன்னணியான மேல்முறையீட்டின் சங்கதிகளை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

---

1. *2005-ஆம் ஆண்டு சட்டம்*
2. *20.04.2012 தேதியிடப்பட்ட சட்டம் எண் 11/2012 மூலம் 4% என்ற எண்ணிக்கைக்கு பதிலாக 5% மாற்றப்பட்டது.*
3. *20.04.2010 தேதியிடப்பட்ட சட்டம் எண் 91/2010 மூலம் 12.5% என்ற எண்ணிக்கைக்கு பதிலாக 14.5% மாற்றப்பட்டது.*

4. எதிர்மனுதாரர் - லிண்டே இந்தியா லிமிடெட், 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் மற்றும் கஜுவாகா மற்றும் துவாரகாநகர் வட்டத்தின் வணிக வரி அதிகாரியின் பட்டியலில் ஒரு மதிப்பீட்டாளர் ஆவார். எதிர்மனுதாரர், தொழில்துறை வாயுக்கள் மற்றும் மருத்துவ ஆக்ஸிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். 12.12.2005 அன்று, வணிக வரி அலுவலர் பிரதிவாதிக்கு, ஆகஸ்ட் 1, 2005 முதல் ஆகஸ்ட் 31, 2005 வரையிலான காலத்திற்கு ரூ.5,11,062/- நிலுவையில் உள்ள வரி செலுத்த வேண்டும் என்ற அறிவிப்பை கொடுத்திருந்தார்.

5. அதிருப்தியடைந்த எதிர்மனுதாரர் ஒரு மேல்முறையீட்டை தீர்ப்பாயம் துணை ஆணையரிடம் தாக்கல் செய்திருந்தார். அவர் ஜூன் 26, 2006 தேதியிட்ட அவரது உத்தரவின் மூலம் வணிக வரி அதிகாரியின் மதிப்பீட்டை உறுதிப்படுத்தினார். நவம்பர் 25, 2014 தேதியிட்ட உத்தரவின் மூலம், ஐநாக்ஸ் ஏர் புராடக்ட்ஸ் லிமிடெட் /எதிர்/ ஹைதராபாத் உதவி ஆணையர் (CT) [2014 வி.இல். (VIL) 339 ஆ.பி.] ஆகியவற்றில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடிப்படையாக கொண்டு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் எதிர்மனுதாரரின் மேல்முறையீட்டை அனுமதித்தது. ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட, மேல்முறையீட்டாளர் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

6. மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940-இன் [1940-ஆம் ஆண்டு சட்டம்] பிரிவு 3(b)(i)-இன் படி, 'மருந்து' என்பது ஒரு நோய் அல்லது உபாதைக்கான சிகிச்சை, தடுப்பு மற்றும் தணிப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் எந்தவொரு பொருளையும் அது உள்ளடக்கியது என்று உயர் நீதிமன்றம் கருதுகிறது. உயர் நீதிமன்றம் (i) மருத்துவ ஆக்சிஜன் IP நோயாளிகளின் சிகிச்சைக்காகவும், நோய்கள் மற்றும் உடல் உபாதைகளின் தீவிரத்தைத் தணிக்கவும் பயன்படுத்தப்படுகிறது; மேலும் (ii) நைட்ரஸ் ஆக்சைடு IP ஒரு மயக்க மருந்தாக அறுவை சிகிச்சை மற்றும் குறுகிய கால நடைமுறைகளில் பயன்படுத்தப்படுகிறது; என்று முடிவு செய்தது. உயர் நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்புரைத்துள்ளது:

> “….."நைட்ரஸ் ஆக்சைடு" மற்றும் "மருத்துவ ஆக்ஸிஜன்" இரண்டும் தெளிவாக பிரித்து பார்க்கக்கூடியவை, மேலும் அவை அறுவை சிகிச்சையில் உதவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன (இந்தியன் ஆக்சிஜன் லிமிடெட் கர்நாடகா மாநிலம்; தெற்கு எரிவாயு லிமிடெட்). பயனர் சோதனை மற்றும் செயல்பாட்டு சோதனை மூலம், "மருத்துவ ஆக்ஸிஜன்" மற்றும் "நைட்ரஸ் ஆக்சைடு" மருந்துகளாக செயல்படுகின்றன என்பது தெளிவாகிறது. 'மருத்துவ ஆக்சிஜன் IP' மற்றும் 'நைட்ரஸ் ஆக்சைடு IP' ஆகியவை மனிதர்களில் ஏற்படும் உடல் உபாதைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் உடல் உபாதைகளை சீர் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன, மேலும் அவை பொதுவாக அறுவை சிகிச்சை உதவிகள் என்று வர்த்தகத்தில் புரிந்து கொள்ளப்படுவதால், இந்த இரண்டு பொருட்களும்'மருந்துகள் சட்டத்தின் பிரிவு 3(b)(i) இன் கீழ்

'மருந்து' என்ற வரையறையின் கீழ் வரும், அதன் விளைவாக, அட்டவணை IV-இன் கீழ் பதிவு 88-இன் கீழும் வருவதால், 4%/5% மட்டுமே வரி விதிக்கப்படும்."

7. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டதாவது:

i) ஐனாக்ஸ் ஏர் தொடர்பான ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை பதிவு 88-இல் உள்ள "ஒத்த பொருட்கள்" என்ற சொற்றொடரில் உள்ளடக்கியவை என்று கூறிவது தவறானது. ஒத்த வகை (ejusdem generis) கொள்கையைப் பயன்படுத்துவதன் மூலம், வாயுக்கள் எல்லாம் பதிவில் குறிப்பிடப்பட்ட மற்ற பொருட்களுக்கு 'ஒத்த பொருட்கள்' என்று கருத முடியாது.

ii) பிரிவு 3(b)(i)-ல் உள்ள 'பயன்படுத்தப்படுகிறது அல்லது பயன்படுத்தப்படுகிறது' என்ற சொல் 'பொருட்களை' மட்டுமே குறிக்கிறதே தவிர 'மருந்துகளை' அல்ல. இதன் விளைவாக, பதிவு 88-இன் நோக்கத்தை விரிவுபடுத்த முடியாது.

iii) 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)(i) கீழ் அறுவைசிகிச்சை அல்லது பிற உபாதைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான பொருட்களை உள்ளடக்கியிருந்தாலும், பதிவு 88-இல் ஒரு விலக்கு விதியும் உள்ளது. அட்டவணை IV-இன் பதிவு 100(36) குறிப்பாக "மருத்துவ தர ஆக்ஸிஜனை"

விலக்குகிறது. பதிவு 88-இல் மருத்துவ ஆக்ஸிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP-யின் குறிப்பிட்ட சேர்க்கை இல்லாததால், அவை அட்டவணை V-இல் வகைப்படுத்தப்படாத பொருட்களின் வரம்பிற்குள் வருகின்றன; மேலும்

iv) எந்த ஒரு 'பொருளும்' மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதால் மட்டுமே பதிவு 88-ன் வரம்பிற்குள் வரும் என்று கூற முடியாது. ஒரு பொருள் பதிவு 88-ன் வரம்பிற்குள் வர, அது 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(1)(b)-இல் உள்ள அர்த்தத்துக்குள் வர வேண்டும் வேண்டும்.

8. மேற்கண்ட சமர்ப்பிப்புகளை எதிர்த்து, எதிர்மனுதாரர் வழக்கறிஞர் பின்வருவனவற்றை வலியுறுத்தினார்:

i) 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)(i) ஆனது, ஒரு 'மருந்து' என்பது எந்தவொரு நோய் அல்லது உபாதைகளை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படும் ஒரு மருந்து அல்லது பொருள் என்று வரையறுக்கிறது. மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை அவற்றின் குணப்படுத்தும் பண்புகளுக்காகவும், நோய் அல்லது உபாதைகளை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படும் மருந்துகளாகவும் பரவலாக அறியப்படுகின்றன.

ii) மருத்துவ ஆக்சிஜன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடுயும், மருந்துகளுக்கான தரங்களை பரிந்துரைக்கும் இந்திய மருந்தியலில் சேர்க்கப்பட்டுள்ளது. 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் 16-வது பிரிவின் கீழ் இந்திய மருந்தியலுக்கு சட்ட அந்தஸ்து உள்ளது. இதன் விளைவாக, மருத்துவ ஆக்சிஜன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவை 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(1)(பி)-ன் வரம்பிற்குள் உள்ள மருந்துகளாகும். மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(1)(பி) வரம்பிற்குள் உள்ள 'மருந்து' என்பதால், அவை 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் 88-வது பதிவில் வெளிப்படையாக சேர்க்கப்பட்டுள்ளன.

iii) பொருட்களானது அவற்றின் பிரபலமான அர்த்தத்தின்படி வகைப்படுத்தப்பட வேண்டும் அல்லது அவற்றின் வாணிப அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அவசரகால மருந்தாகவும், மருத்துவ சேவைகளை வழங்கவும் ஆக்ஸிஜன் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. நைட்ரஸ் ஆக்சைடு அறுவை சிகிச்சை மற்றும் பல் மருத்துவத்தில் மயக்க மருந்துக்காக பயன்படுத்தப்படுகிறது. பொதுவான பேச்சு வழக்கில் பார்த்தால், சர்ச்சைக்குரிய இந்த தயாரிப்புகள் நோய்கள் மற்றும் உடல் உபாதைகளை தணிப்பதில் பயன்படுத்தப்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை, மேலும், 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)(i)-இல் வரையறுக்கப்பட்ட மருந்துகளாக பதிவு 88-ன் வரம்பிற்குள் இவை அடங்கும்.

iv) நாட்டில் உள்ள பல உயர் நீதிமன்றங்கள் மருத்துவ ஆக்சிஜன் IP மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு IP ஆகியவை மருந்துகள் என்று அந்தந்த மாநில சட்டங்கள் கருதுகின்றன என்று கூறியுள்ளது. இதற்கு மேற்கோளான வழக்குகள் சதர்ன் கேஸ் /எதிர்/ கேரளா மாநில அரசு [2005 (139) எஸ்.டி.சி. 504 (கேர)], தமிழ்நாடு மாநில அரசு /எதிர்/ ராம் ஆக்ஸிஜன் (பிரைவேட்) லிமிடெட். ([2011] 5 ஜி.எஸ்.டி. 87 (மெட். உ.நீ.ம.)) , பாங்கி ஆக்சிஜன் /எதிர்/ உத்தரப்பிரதேச மாநில அரசு [(2014) எஸ்.சி.சி. ஆன்லைன் ஆல். 2144], சிமன்லால் /எதிர்/ மகாராஷ்டிரா மாநில அரசு [2004 (137) எஸ்.டி.சி. 68], இந்திய இந்திய ஆக்சிஜன் /எதிர்/ கர்நாடகா மாநில அரசு [1990 (79) எஸ்.டி.சி. 351], கேரளா மாநில அரசு /எதிர்/ இந்தியன் ஆக்சிஜன் [2003 (129) எஸ்.டி.சி. 471] மற்றும் ஏ.சி.டி.ஒ., சிறப்பு வட்டம் ஜோத்பூர் /எதிர்/ தி/ள். ஜோத்பூர் வாயுக்கள் [(2009) எஸ்.சி.சி. ஆன்லைன் 2459] ஆகும்.

v) மருந்து விலை (கட்டுப்பாட்டு) ஆணை 2013, அட்டவணை I-இன் தேசிய அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் 2011, பிரிவு 1-இன் கீழ் 'ஆக்சிஜன்' மற்றும் 'நைட்ரஸ் ஆக்சைடு' ஆகியவற்றை 'மயக்க மருந்து' என பட்டியலிட்டுள்ளது; மற்று

vi) தற்போதைய மேல்முறையீடு எழும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஐநாக்ஸ் ஏர் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேயே ஆகும், இவை இரண்டும் இந்த நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.

9. எதிர் தரப்பு வாதங்களும் பரிசீலனை செய்யப்பட்டத.

10. சட்ட கோட்பாட்டின் மூலம் தொடங்குகையில் 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் அட்டவணை IV பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு 4%/5% என்ற சீரான வரி விகிதத்தை பரிந்துரைக்கிறது. அட்டவணை IV-இன் பதிவு 88 பின்வருமாறு கூறுகிறது:

> "மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 (மத்திய சட்டம் 23, 1940) பிரிவு 3(b)-இன் கூறுகள் (i), (ii) மற்றும் (iii)-இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி காப்புரிமை அல்லது தனியுரிமை பெற்ற மருந்துகளாக இருந்தாலும், ஹைப்போடெர்மிக் சிரிஞ்ச்கள், ஹைப்போடெர்மிக் ஊசிகள் உட்பட, கேட்கட்ஸ், தையல், அறுவைசிகிச்சை பருத்தி, டிரஸ்ஸிங், பிளாஸ்டர்கள், வடிகுழாய்கள், கேனுலா, பேண்டேஜ்கள் மற்றும் ஒத்த பொருட்கள் உள்ளடங்கும், ஆனால் அந்த பட்டியலில் சேராதது
>
> a) மருந்து பொருட்கள்
>
> b) பற்பசைகள், பல் பொடிகள், அழகுசாதனப் பொருட்கள், கழிவறைப் பொருட்கள் மற்றும் சோப்புகள் உள்ளிட்ட அழகுசாதனப் பொருட்கள் மற்றும் கழிப்பறை தயாரிப்புகளாகப் பயன்படுத்தக்கூடிய தயாரிப்புகள்; மற்றும்
>
> c) எந்த வடிவத்திலுமுள்ள கொசு விரட்டிகள்."

பதிவு 88-ஆனது 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)-இன் கூறுகள் (i), (ii) மற்றும் (iii) ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள காப்புரிமை அல்லது தனியுரிமமாக பெற்ற,

மருந்துகளை உள்ளடக்கியது. பிரிவு 3(b)-ன் கூறுகள் (i), (ii) மற்றும் (iii)-ன் வரம்பிற்குள் வரும் எந்த மருந்தும் அட்டவணை IV-இன் வரம்பிற்குள் வரும். குறிப்பிடப்பட்ட மூன்று விலக்குகளைத் தவிர, ஹைப்போடெர்மிக் சிரிஞ்ச்கள், ஹைப்போடெர்மிக் ஊசிகள், கேட்கட்ஸ், தையல்கள், அறுவை சிகிச்சை பருத்தி, டிரஸ்ஸிங், பிளாஸ்டர்கள், கேதர்ட்டர்கள், கேனுலா, பேண்டேஜ்கள் மற்றும் 'ஒத்த பொருட்கள்' சேர்க்கப்பட்டு, பதிவு 88 வரையறுக்கிறது.

11. 2005-ஆம் ஆண்டு சட்டத்தின் அட்டவணை V இவ்வாறு கூறுகிறது:

> "14.5% என்ற நிலையான விகிதத்தில் (ஆர்.என்.ஆர்) வரி விதிக்கக்கூடிய பொருட்கள்.
>
> அட்டவணை I, III, IV, VI-இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை தவிர மற்ற அனைத்து பொருட்களும்."

அட்டவணை I, III, IV மற்றும் VI ஆகியவற்றின் வரம்பிற்குள் வராத அனைத்து பொருட்களுக்கும் 14.5% வரி விதிக்கப்படும் என்று அட்டவணை V வரையறுக்கிறது.

12. 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b) "மருந்து" என்பதை பின்வரும் வார்த்தைகளில் விளக்குகிறது:

> i) மனிதர்கள் அல்லது விலங்குகள் உட்புற அல்லது வெளிப்புற பயன்பாட்டிற்காக பயன்படுத்தபடும் அனைத்து மருந்துகளும், மேலும் மனிதர்கள் அல்லது விலங்குகளில் ஏதேனும் நோய் அல்லது உடல் உபாதை

கண்டறிதல், சிகிச்சை அளித்தல், தணிப்பு செய்தல் அல்லது தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும், கொசு போன்ற பூச்சிகளை விரட்டும் நோக்கத்திற்காக உடலில் வெளிப்புறமாக போடப்படும் கிருமி நாசினிகள் கூட இதில் அடங்கும்;

.....

iv) மனிதர்கள் அல்லது விலங்குகளில் நோய் அல்லது உடல் உபாதைகளை கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது தடுப்பு ஆகியவற்றில் உள் அல்லது வெளிப்புறப் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட இத்தகைய சாதனங்கள், வாரியத்தின் ஆலோசனைபடி அதிகாரப்பூர்வ அரசிதழில் அறிவிப்பின் மூலம் அவ்வப்போது மத்திய அரசால் குறிப்பிடப்படலாம்.

பிரிவு 3(b)-இன் கூறு (i) ஒரு மருந்தை, மனிதர்கள் அல்லது விலங்குகளின் உள் அல்லது வெளிப்புற பயன்பாட்டிற்கான மருந்துகளாகவும், மற்றும் மனிதர்கள் மற்றும் விலங்குகளை "எந்தவொரு நோய் அல்லது உடல் உபாதையை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட தயாரிப்புகள் உட்பட அனைத்து பொருட்களாகவும் வரையறுக்கிறது. பிரிவு 3(b)-இன் கூறு (iv)-ஆனது மனிதர்கள் அல்லது விலங்குகளில் நோய் அல்லது உடல் உபாதையை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, அதை குறைக்க அல்லது தடுக்க உபயோகபடுத்தப்படும் உள் அல்லது வெளிப்புறப் பயன்பாட்டிற்காக 'உத்தேசிக்கப்பட்ட' அனைத்து சாதனங்களையும் உள்ளடக்கியது.

13. சிமன்லால் ஜக்ஜீவன்தாஸ் ஷெத் /எதிர்/ மகாராஷ்டிரா மாநில அரசு [ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 665] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் இந்த நீதிமன்றத்தின் ஆரம்பத் தீர்ப்பில், நான்கு நீதிபதிகள் ஆயம் முன் இருந்த கேள்வி, உறிஞ்சக்கூடிய பருத்தி கம்பளி, ரோலர் பேண்டேஜ்கள் மற்றும் துணிகள் 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(பி) வரம்பிற்குள் வருமா என்பதுதான். அவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு முடிவு செய்தது:

> “3. "மருந்துகள்" என்ற வரையறையானது மருந்துகள் மட்டுமல்ல, மனிதர்கள் அல்லது விலங்குகளின் நோய்களுக்கு அல்லது சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களையும் குறிக்கும் என்று கூறியிருந்து. இந்த அர்த்தத்தால் மருந்துகள் மற்றும் கண்டிப்பாக மருந்துகள் என்று அழைக்கப்படாத பொருட்கள். எனவே, பொருட்கள் என்பது மருந்துகள் அல்லாத ஆனால் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் பொருளாகும். தற்போதைய வழக்கிற்கான தேவைப்படும் பொருளின் வரையறையின் பகுதி என்னவென்றால் "சிகிச்சைக்கு அல்லது பயன்படுத்த உத்தேசிக்கப்பட்ட பொருட்கள்". இந்த பிரிவில் "பொருட்கள்" என்ற சொற்றொடரின் பொருத்தமான பொருள் " பொருட்கள் " என்பதாகும். உறிஞ்சக்கூடிய பருத்தி கம்பளி, ரோலர் பேண்டேஜ்கள் மற்றும் துணி ஆகியவை கூறப்பட்ட வெளிப்பாட்டின் அர்த்தத்திற்குள் "பொருட்கள்" என்பதை மறுக்க முடியாது, உண்மையில் அது மறுக்கப்படவும் இல்லை. அப்படியானால், அவை “சிகிச்சைக்காக” பயன்படுத்தப்படுகின்றனவா என்பது அடுத்த கேள்வி.”

இந்த முறையீட்டின் நோக்கத்திற்காக "மருந்துகள்" என்ற வரையறைக்குள் வரும் "பொருட்களை" முழுமையாக பார்க்க வேண்டிய அவசியமில்லை; மேலும் அறுவை சிகிச்சை கருவிகள் மருந்துகளா இல்லையா என்பதை நாங்கள் இங்கே பரிசீலனை செய்யவில்லை."

(வலியுறுத்தப்பட்டது)

இந்த நீதிமன்றம், வரையறையின் விரிவான தன்மையில் மருந்துகள் மற்றும் மருந்துகளைத் தவிர வேறு சிலவற்றை உள்ளடக்கியது, ஆனால் அவை சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அப்படியானால், உறிஞ்சக்கூடிய பருத்தி கம்பளி, ரோலர் பேண்டேஜ்கள் மற்றும் காஸ் ஆகியவை பிரிவு 3(பி)-இன் வரம்பிற்குள் உள்ள 'பொருட்களா' என்பது சம்பந்தப்பட்ட கேள்வி. அந்தச் சூழலில்தான், இந்த நீதிமன்றம், பொருள்கள் என்பதற்கு 'பொருள்கள் தான்' என்று தீர்ப்பளித்தது. வரையறுக்கப்பட்டுள்ளபடி மருந்துகளின் வரம்பிற்குள் வரும் 'பொருட்களை' முழுமையாக வரையறுக்க வேண்டிய அவசியமில்லை என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. ஒரு பொருள் ஒரு மருந்தாகப் பயன்படுத்தப்படாவிட்டாலும், நோய் கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது தடுப்புக்கு (*4*) பயன்படுத்தப்படலாம். ஒரு மருந்து அல்லாத பிற

---

4. எடுத்துக்காட்டாக, பேரியம் என்பது ஊடுகதிரில் கண்டறியும் செயல்பாட்டில் ஒரு தனிமமாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள் ஆகும்.

தயாரிப்பு ஏதேனும் நோய் அல்லது உபாதைகளுக்கான கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது தடுப்புக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்றால், அது 1940-ஆம் ஆண்டு பிரிவு 3(b)(i)-ன் வரம்பிற்குள் வரும் ஒரு 'பொருளாக' இருக்கும்.

14. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், பிரிவு 3(b)(i)-இல் உள்ள "எந்தவொரு நோய் அல்லது உபாதையை கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது அதன் தடுப்புக்காக பயன்படுத்த வேண்டும்" என்ற சொற்றொடர் 'பொருட்களுக்கு' மட்டுமே பொருந்தும், 'மருந்துகளுக்கு' அல்ல என்று வலியுறுத்தினார். ஈஸ்வர் சிங் பிந்த்ரா /எதிர்/ உத்தர பிரதேச மாநில அரசு ([1969] 1 எஸ்.சி.ஆர். 219) என்று வழக்கில், இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் ஆயம் முன் உள்ள முக்கிய கேள்வி 1940-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 3(b)(i)-இன் விளக்கம் ஆகும். அதற்கு அந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு முடிவு செய்தது:

> 11. "பொருட்கள்" என்ற சொல் "மருந்து" என்பதைத் தவிர வேறு எதையாவது குறிக்க வேண்டும் என்றால், எங்கள் முந்தைய முடிவில் எடுக்கப்பட்டதைப் போல, பிரிவு 3 (பி) (ஐ)-இல் உள்ள மருந்தின் வரையறையில் "மருந்துகள்" மற்றும் "பொருட்கள்" ஆகியவற்றுக்கு இடையில் பயன்படுத்தப்படும் "மற்றும்" என்ற சொல் எவ்வாறு ஒருங்கிணைந்து பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாகும். அதை பிரித்து வாசிப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். ஸ்ட்ரூடின் நீதித்துறை அகராதியில், 3வது பதிப்பில் பக்கம் 135-இல் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், "மற்றும்" என்ற வார்த்தை பொதுவாக அதை பயன்படுத்தும் இடத்தில் அது அனைத்தையும்

ஒன்றினைக்கும். சில சமயங்களில், அத்தகைய இணைப்பில் கூட, "மற்றும்" என்ற வார்த்தை "அல்லது" என வாசிக்கப்படுகிறது. இதேபோல், சட்டங்களின் விளக்கம் என்ற புத்தகத்தின் 11வது பதிவில், மேக்ஸ்வெல், "சட்டமன்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவ்வப்போது 'அல்லது' மற்றும் 'மற்றும்' என்ற வார்த்தைகளை ஒன்றை மற்றொன்றாகப் படிக்க வேண்டியது அவசியம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது."

கூறில் உள்ள 'பொருட்கள்' என்ற சொல் 'மருந்து' என்பதைத் தவிர வேறு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதால், "மற்றும்" என்ற வார்த்தையை இணைத்துப் படிக்க வேண்டும் என்பது சட்டமன்றத்தின் நோக்கம் அல்ல என்று இந்த நீதிமன்றம் கூறியது. அதன்படி, வரையறை கூறின் இரண்டு பகுதிகளையும் பிரிக்காமல் படிக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கூறியது.

15. மேற்கூறிய கோணத்தில் பார்க்கையில், பிரிவு 3(b)(i), மனிதர்கள் அல்லது விலங்குகளில் ஏதேனும் நோய் அல்லது உபாதைகளை கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது தடுப்பு ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் அல்லது பொருட்களை பிரிவின் வரம்பிற்குள் சேர்க்க வேண்டும் என்று வரையறுக்கிறது. வரையறை விதியில் 'for' அல்லது 'in' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. பிரிவு 3(b)(i) எந்தவொரு நோய் அல்லது உபாதைகளை கண்டறிதல், சிகிச்சை, தணிப்பு அல்லது தடுப்பு ஆகியவற்றிற்காக அல்லது எந்தவொரு நோய் கண்டறிதல், சிகிச்சை, மின் தணிப்பு அல்லது தடுப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருந்துகள் அல்லது பொருட்கள் இரண்டையும் உள்ளடக்கியது. முந்தையது ஒரு நோய்

